www.padippakam.com



**சங்கிலிகுமாரன் செகராசசேகரன்**

கி.பி. 1591 இல் போர்த்துக்கேயர் மூன்றாவது தடவையாக அந்திரே பூர்த்தாடு தே மெண்டோன்சா என்னும் படைத்தலைவனை பெரும்படையுடன் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைத்தனர். தமிழர் படையுடன் பறங்கியர் படையும் நல்லூர்

வடவிலங்கையின் யாழ்ப்பாணக்குடாநாடு, தவிர்ந்த பெரு நிலப்பரப்பு வன்னி எனப்படுகிறது. பச்சிலைப்பள்ளியில் கச்சாய்ப் பகுதியும் சில காலங்களில் வன்னிமையாகக் கருதப்பட்டுள்ளது என்பதற்கு ஆதாரங்களுள்ளன. வடக்கே யாழ்ப்பாணக் கடனீரேரிக்கும் தெற்கே அருவியாற்றுக்கும்

அமைப்பதற்கு எவ்வளவு மனிதவலு தேவைப்பட்டிருக்கவேண்டும் என எண்ணும் போது இன்றைய வன்னிப்பிரதேச மக்கட் தொகை போலப் பலமடங்கு அன்று இருந்திருக்கவேண்டும். இலட்சக்கணக்கான மக்களின் வாழிடமாக வன்னி விளங்கியிருக்கவேண்டும். வன்னி நாட்டின் வரலாற்றுச்

எல்லாளன் கட்டிய பெலி வாவி வவுனிக்குளம் ஆகும். வசபன் என்ற மன்னனால் (கி.பி.66 - 110) அமைக்கப்பட்ட பாலிநகரம் இந்த வவுனிக்குளத்தின் அருகே இருந்துள்ளது. 1889 ஆம் ஆண்டு யூன் 8ஆம் திகதி வவுனிக்குளத்திற்கு வருகை தந்த முல்லைத்தீவின் உதவி அரசாங்க அதிபர் நெவில், பாலியாற்றின் அருகே சிதிலமடைந்த

ஆற்றிலமைந்துள்ள புதுமுறிப்புக் குளம் அக்கராயனாற்றிலமைந்துள்ள அக்கராயன் குளம் இரண்டும் புராதன வன்னிப்பிரதேசங்களாகும். 1882 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 26 ஆம் திகதி யாழ்ப்பாண அரசாங்க அதிபர் டபிள்யு.சீ.துவைனம் இக்குளங்களைப்

# ஈழத்தவர் வரலாறு 20

## கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621ஆம் ஆண்டு வரை....

கந்தசுவாமி கோவிலுக்கும் வீரமாகாளியம்மன் கோயிலுக்கும் இடையில் மோதின. தமிழர் படை தோல்வியைத் தழுவ நேர்ந்தது. பூர்த்தாடு, பெரியபிள்ளையின் மகனாகிய எதிர்மன்ன சிங்கனை மன்னனாக்கி மீண்டான். எதிர் மன்ன சிங்கன் கி.பி.1616 இல் மரணமடைய சங்கிலிகுமாரன் செகராசசேகரன் அரியணையிலமர்ந்து கொண்டான். இவனே யாழ்ப்பாண.இராச்சியத்தின் கடைசி மன்னனாவான். கி.பி. 1620 ஆம் ஆண்டு போர்த்துக்கேயரின் இறுதிப்படையெடுப்பு நிகழ்ந்தது. இப்படையெடுப்புக்கு பிலிப்தே ஒலிவேறா என்பவன் படைத்தலைமை தாங்கினான். இப்படையெடுப்பில் தமிழ் வீரர்கள் கொடூரமாகத் தாக்கப்பட்டார்கள். சங்கிலி குமாரன் குடும்பத்துடன் சிறைப்பிடிக்கப்பட்டு கோவைக்கு அனுப்பப்பட்டான். அங்கு அவனைச் சிரச்சேதம் செய்தார்கள். ஆரிய அரச பரம்பரை அவனது மரணத்துடன் அழிந்து போனது. யாழ்ப்பாண இராச்சியத்தின் தேசாதிபதியாக பிலிப் தே ஒலிவேறா தன்னை நியமித்துக் கொண்டான். அவன் காலத்தில் நல்லூர் கந்தசுவாமி கோவிலுட்பட பல சைவக்கோவில்கள் அழித்து தரைமட்டமாக்கப்பட்டன. அவற்றைக் கொண்டு யாழ்ப்பாணக் கோட்டை கட்டப்பட்டது. பல நூற்றாண்டு காலமாகச் சுதந்திரத்தைப் பேணிப் பாதுகாத்து வந்த தமிழர் இராச்சியத்தில் கி.பி.1621 ஆம் ஆண்டு சுதந்திர சூரியன் அஸ்தமித்தது.

### வன்னிச் சிற்றரசுகள்


நுவரகலாவாவியாப் பிரதேசத்திற்கும் மேற்கே மன்னாருக்கும் கிழக்கே திருகோணமலைக்கும் இடையில் வன்னிப்பிரதேசம் அமைந்திருந்தது. ஆங்காங்கு சிதறலாக கிராமியக் குளங்களை ஆதாரமாகக் கொண்டமைந்த காட்டுக் கிராமங்கள், அடர்காடுகளால் சூழப்பட்டு விளங்கியுள்ளன. வரலாற்றுக்கு முந்திய காலத்தில் இப்பிரதேசம் நாகரீகம் வாய்ந்த மக்கட் கூட்டத்தினரின் குடியிருப்புக்களாக விளங்கியுள்ளன என்பதற்கு 1985 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி குஞ்சுப் பரந்தனில் கண்டு அகழ்ந்தெடுக்கப்பட்ட முதுமக்கள் தாழி சான்றாகிறது. வன்னி நாட்டில் முதன் முதல் கண்டறியப்பட்ட தாழி இதுவே. திராவிட நாகரீகம் இங்கெல்லாம் பரவி நிலை கொண்டிருந்தது என்பதற்கு முறையான ஆதாரமாக இத்தாழி நமக்குக் கிடைத்துள்ளது. வன்னிப்பிரதேசத்தில் குளக்குடியிருப்புக்களே பெரிதும் பரந்துள்ளன. குளத்தின்

**-செங்கை ஆழியான்-**

பெயராலேயே அப்பகுதிக் கிராமங்களும் அழைக்கப்பட்டு வருகின்றன. புளியங்குளம், கனகராயன் குளம், பெரியபுளியாலங்குளம், தென்னியன் குளம் என்ற பெயர்கள் குளங்களைக் குறிப்பதோடு அவ்விடத்துக் கிராமத்தையும் குறிப்பனவாகவுள்ளன. எனவே வன்னிப்பிரதேசத்தில் இன்று பாழடைந்து கிடக்கும் குளங்களையும் ஒவ்வொரு கிராமக் குடியிருப்பாக கருதி வன்னிப்பிரதேச மக்கட் தொகை முன்னர் அதிகமாக இருந்திருக்கவேண்டும். வன்னிப்பிரதேசத்தில் ஆயிரக்கணக்கான குளங்களை

சிறப்பினை அங்கு பாழடைந்து கிடக்கும் ஆயிரக்கணக்கான குளங்களும் முறிப்பு அணைகளும் கல் கலிங்குகளும், மடைகளும், சிதிலமடைந்த கோவில்களும், புராதன பாலங்களும் பாதைகளும் எடுத்துக் கூறுகின்றன. ஒவ்வொரு சிற்றாறுகளும் முழுமையாகப் பயன்கொள்ளப்பட்டிருக்கின்றனவென்பதை அவற்றின் வடிகாற் போக்கில் அமைக்கப்பட்டிருக்கும் நூற்றுக்கணக்கான தொடர் குளங்கள் எடுத்தியம்புகின்றன. வன்னிப் பிரதேசத்தில் காணப்படுகின்ற புராதன குளங்கள், கட்டிட அழிபாடுகள் ஏனைய தொல்லியற் சான்றுகள் இப்பிரதேசம் ஒரு காலத்தில் இருந்த சிறப்பினை எடுத்துக் காட்டுவன்வாக உள்ளன. வன்னிப் பிரதேசத்தின் தென்பகுதி நதியான அருவியாற்றின் பிரதான கிளையாகிய கல்லாற்றில் அலவிச்சைக்குளம் (ஈரற்பெரிய குளம்), பாவற்குளம் எனுமிரு புராதன குளங்களுள்ளன. பாவற்குளத்தின் கலிங்குகளையமைக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கும் செங்கற்கள் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தவை' என பாக்கர் குறிப்பிட்டுள்ளார். அருவியாற்றுக்கு அடுத்ததாக முக்கியம் பெறும் மேற்குக் கரையோர நதி மணலாறு எனப்படும் பறங்கியாறாகும். மன்னாருக்கு அருகே இலுப்பைக்கடவையில் இது கடலையடைகின்றது. மேற்கே பாயும் அடுத்த நதி பாலியாறு ஆகும். இந்த நதியில் பெலிவாவி என்றொரு நீர்த்தேக்கம் இருந்ததாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது. இது கி.மு.3 ஆம் நூற்றாண்டின் தமிழரசன் எல்லாளனால் கட்டப்பட்டதாக புறோகியர் என்பார் கருதுகிறார்.

கட்டமைப்புக்களை அவதானித்துள்ளார். கோவில் காடு என்ற இடத்தில் பாழடைந்த கோயில் ஒன்று காணப்பட்டது. தலையில்லாத புத்தர் சிலையொன்றும் இடுப்புடன் உடைந்த விஷ்ணு




சிலையொன்றும் அவ்விடத்தில் காணப்பட்டன. உடைந்த லிங்கம் ஒன்றும் இருந்ததெனக் குறிப்பிட்டுள்ளார். கரியாலைக்குளம், நாகபடுவான் குளம் ஆகிய இரண்டும் வன்னிப் பிரதேசப் புராதன நீர்ப்பாசனக் குளங்களாகும். அணைக்கும் கடலுக்கும் இடைப்பட்ட பரந்த பிரதேசத்தினை இவை நீர்ப்பாய்ச்சியுள்ளன. கலவலப்பு

பார்வையிட்டுள்ளார். உருத்திரபுரத்தில் பாழடைந்த சிவன் கோவில் ஒன்றினதும் தாதுகோபம் ஒன்றினதும் அழிபாடுகளைக் கண்டு குறித்துள்ளார். செழிப்பான ஒரு நகரம் இங்கு இருந்திருக்கவேண்டும என்பது அவரது கருத்து.

வன்னியின் வடகிழக்குப் பகுதியில் நாயாறு, பேராறு என இரு அருவிகள் பாய்கின்றன. முன்னது நாயாறுக் கடனீரேரியிலும் பின்னது நந்திக் கடலிலும் சங்கமமாகின்றன. நாயாற்றில் மிகப் புராதனமான தண்ணி முறிப்புக் குளம் அமைந்துள்ளது.

(தொடரும்)

படிப்பகம்